இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 17-09-2025

# கருணையின் முதல்வர்!

‘அன்புக் கரங்கள்’ திட்டத்தின் மூலமாக கருணையின் முதல்வராகக் காட்சி தருகிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்!

**ஏழ்மையான குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ‘தாயுமானவர்’ திட்டத்தை தொடங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ‘அன்புக்கரங்கள்’ என்ற திட்டத்தை செப்டம்பர் 15 ஆம் நாள் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் தொடங்கி வைத்துள்ளார் முதலமைச்சர்.**

பெற்றோர்கள் இல்லாத குழந்தைகளுக்கு பெற்றோராக இருக்கும் கருணை உள்ளத்தோடு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப்படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் 2 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

பள்ளிப்படிப்பை முடித்த பின்னர் கல்லூரி கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யும் இத்திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்கினார். பெற்றோர் இருவரையும் இழந்து 12 ஆம் வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கினார்.

**‘அன்புக்கரங்கள்’ திட்டத்தைச் செயல்படுத்த கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டது. இதன் மூலமாக கிடைத்த தரவுகளின் அடிப்படையில் 6 ஆயிரத்து 82 குழந்தைகள் தமிழ்நாடு அரசின் நிதி உதவியினை மாதம் தோறும் பெற உள்ளனர்.**

**“திராவிட மாடல் என்றால் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்று எளிமையாக விளக்கம் சொல்லிவிடலாம். ஆனால், எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பது உழைப்பதும், பாடுபடுவதும் எளிதானது அல்ல!”** என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அரிதான அந்தச் செயலைத் தான் முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள்.

**“சமூகத்தின் கடைக்கோடி மனிதரையும் கை கொடுத்து மேலே தூக்கி விடும் கையாக என்னுடைய கை இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்! அப்படிதான், இருந்து கொண்டிருக்கிறேன். பெற்றோர் வேலைக்குச் செல்கிறார்கள் என்று, குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குகிறோம்.பெற்றோரே இல்லாத குழந்தைகளை, சிங்கிள் பேரண்ட் இருக்கின்ற குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் வந்தது. அந்த அடிப்படையில் உருவானதுதான், இந்த அன்புக்கரங்கள் திட்டம்”** என்று முதலமைச்சர் அளித்துள்ள விளக்கத்தில் இத்திட்டத்தின் முழுமையான கருணை முகம் தெரிகிறது.

பெற்றோர் இருவரையும் இழந்த ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் மாற்றுத் திறனாளியாக (Physically, Mentally challenged) இருப்பவரின் குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருப்பின் அவரது குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வருவோரின் குழந்தைகள் உதவி பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரச்சினையை எவ்வளவு ஆழமாக ஆய்வு செய்து இத்திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதையும் இதன் மூலம் அறியலாம்.

கொரோனா காலத்திலேயே பெற்றோர் இருவரையும் இழந்த, தாய் அல்லது தந்தையை இழந்த 382 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5.00 லட்சம் வீதம் வைப்புத் தொகை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்தக் குழந்தைகள் 18 வயதை நிறைவு செய்யும்போது அவர்களுக்கு வட்டியுடன் வழங்கும் திட்டம் அது. தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்குட்பட்ட 13 ஆயிரத்து 682 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் வைப்புத் தொகை வழங்கியவரும் முதலமைச்சர்தான்.

கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு, பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் 365 குழந்தைகளுக்கு மாத பராமரிப்புத் தொகையாக ரூ.3,000 வழங்கினார் முதலமைச்சர். இவை அனைத்தும் அவரது கருணை உள்ளத்தின் காட்சிகள் ஆகும்.

திராவிட மாடல் ஆட்சியில் மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது. ‘மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021’ என்ற அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

**‘நமக்கு யாருமில்லை என்று நினைக்காதீர்கள், நான் இருக்கிறேன்’** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன சொல் மிகமிக முக்கியமானது.

குடும்பமானது குழந்தைகளுக்கானதாக இருக்கிறது. பெற்றோரின் அரவணைப்புதான் குழந்தைகளை வளர்த்தெடுக்கும். அத்தகைய பெற்றோர் இல்லாமல் போவது அந்த குழந்தைகளுக்கு அனைத்து வகையிலும் மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கும். குழந்தைகள் மத்தியில் ஒருவிதமான பயம் தொற்றி வருவதாக அண்மைக் காலத்து ஆய்வுகள் சொல்கின்றன. அந்த பயத்தைப் பெற்றோர்கள்தான் போக்க வேண்டும். பெற்றோர்கள் இல்லாத இடத்தில் அரசாங்கம் அந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைக்கிறார்கள்.

பெற்றோரின் பாதுகாப்பு, அன்பு, பாசம், பெற்றுத் தருதல், கொடுத்தல், வழிநடத்துதல் ஆகிய அனைத்தும்தான் குழந்தைகளை உருவாக்குகிறது. பெற்றோர் இல்லாத இடத்தில் அரசாங்கம் அதனை வழங்குவதுதான் அன்புக் கரங்கள் திட்டம் ஆகும்.

**இதுவரை யாரும் செய்யாதது. இதுவரை யாரும் சிந்திக்காதது. இதுவரை யாருக்கும் தோன்றாதது. இன்றைய முதலமைச்சர் சிந்திக்கிறார், செய்திருக்கிறார் என்பதால்தான் அவரை கருணையின் முதல்வர் என்கிறோம்.**

••



கழக முப்பெரும் விழாவையொட்டி சென்னை - அண்ணா அறிவாலயம் வண்ண விளக்குகளால் ஜொலிக்கும் காட்சி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (16.9.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் பிரான்ஸ் நாட்டின் – வால் டி லாயர் (CentreVal De Loire) மாகாணத்துடன் கலாச்சார பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, பாண்டிச்சேரி மற்றும் சென்னையில் உள்ள பிரான்ஸ் நாட்டு தூதர் எட்டியென் ரோலண்ட் பீக் (Mr. Etienne Rolland Piegue), தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலாத் துறை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் மாகாணத்தின் கலாச்சாரம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு துணைத் தலைவர் திருமதி டெல்ஃபைன் பெனாசி உள்ளிட்ட மாகாண பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கலாச்சார பரிமாற்றம் — சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பாக

# பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் மாகாணத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து!

**சென்னை, செப். 17 -**

**தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் மாகாணத்துடன் கலாச்சார பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (16.09.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் (CentreVal De Loire) மாகாணத்துடன் கலாச்சார பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் மற்றும் பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் மாகாணத்தின் கலாச்சாரம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு துணைத் தலைவர் திருமதி டெல்ஃபைன் பெனாசி ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐந்து ஆண்டு காலம் நடைமுறையில் இருக்கும்.

தமிழ்நாடு அரசு, சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்புகளை வழங்குவதில் ஒரு முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழவும். பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் புதிய சுற்றுலா கொள்கையை 26.09.2023 அன்று வெளியிடப்பட்டது. இக்கொள்கையானது சுற்றுலாவிற்கு தொழில்துறை தகுதிநிலை வழங்குவதிலும், சலுகைகள் ஊக்கத் தொகைகள், தனியார் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் தனியரை சுற்றுலாத் தொழிலில் பங்கு கொள்ள செய்வதிலும் முக்கிய பங்காற்றும் வகையில் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு நிலையான சூழலை ஏற்படுத்துவதுடன், பாதுகாப்பான மற்றும் தரமான சுற்றுலா சேவைகளை வழங்குவதற்கும், சுற்றுலா முதலீடுகளை ஈர்ப்பதற்கும் உகந்த சூழலை உருவாக்குதே இக்கொள்கையின் இலக்காகும்.

மேலும் சுற்றுலா துறையால் பல்வேறு மாவட்டகளில் மேற்கொள்ளப்படும் சுற்றுலா மேம்பாட்டு பணிகளால் 2023 ஆம் ஆண்டில் 28.71 கோடியாக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 2024 ஆம் ஆண்டில் 30.80 கோடியாக அதிகரித்தது. 2024 ஆம் ஆண்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இந்தியாவில் 2வது இடத்தில் உள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக, நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தமானது, பிரான்ஸ் மற்றும் தமிழ்நாட்டிற்கு இடையில் கூட்டாண்மையின் அடிப்படையில் கலாச்சார பரிமாற்றத்தில் நல்ல அனுபவங்கள் மற்றும் நடைமுறைகளை வகுக்கும்.

மேலும், பிரான்ஸ் மற்றும் தமிழ்நாட்டிற்கு இடையே கலைஞர்களின் பரிமாற்றத்தை எளிதாக்கி கலைஞர்கள், கலை நிறுவனங்கள், கலாச்சார நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் கலாச்சார ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்தும். அத்துடன் கலாச்சார பயிற்சி நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை எளிதாக்கி, ஊக்குவிக்க இந்த ஒப்பந்தம் துணை புரியும்.

மேலும், இந்த ஒப்பந்தம் சுற்றுலாத் துறையில் பொதுக் கொள்கைகள், அனுபவங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்வது; கலாச்சாரம், வரலாற்று மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது; சுற்றுலா நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பது; பாரம்பரிய கலைஞர்களின் திறன் மற்றும் நிபுணத்துவ பரிமாற்றத்தை எளிதாக்குவது; சுற்றுலா, கலை மற்றும் கலாச்சாரப் பண்பாடு, தொல்லியல், பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் அருங்காட்சியகத் துறை ஆகிய பயிற்சி நிறுவனங் களுக்கு இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிப்பது மற்றும் எளிதாக்குவது ஆகியவற்றை மேம்படுத்தும். அத்துடன் சுற்றுலாத் துறையில் குறுகிய கால பயிற்சித் திட்டங்களில் மாணவர்களின் பரிமாற்றத்தை எளிதாக்கி கண்காட்சிகள், வர்த்தக நிகழ்ச்சிகள் போன்ற கூட்டு நடவடிக்கைகளை எற்பாடு செய்யவும் துணை புரியும்.

இந்நிகழ்ச்சியில், பாண்டிச்சேரி மற்றும் சென்னையில் உள்ள பிரான்ஸ் நாட்டு தூதர் எட்டியென் ரோலண்ட் பீக் (Mr. Etienne RollandPiegue), தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலாத் துறை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், வால் டி லாயர் (CentreVal De Loire) மாகாண பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் குளச்சல் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பாக முகவர்களுக்கான (BLA 2) ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை பணியினை திறம்பட செய்த கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல் சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் 3 பேருக்கு தங்க மோதிரங்கள் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் ஏற்பாட்டில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களால் வழங்கப்பட்டது.